www.Padasalai.Net www.CBSEtips.in

TUTY

Reg.No.

# மூன்றாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2020

காலம்:1.30மணி வகுப்பு - 9 மதிப்பெண்கள்: 50

தமிழ்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8 x 1 = 8

1. முண்டி போதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது
   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி
2. தமிழ்ப்புலவரைப் போலவே உரோமைச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை
   அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்
   இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்
3. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி
   அ) சொல்பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
   இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி
4. யா மரம் எந்த நிலத்தில் வளரும்?
   அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்
5. பெரியார் தோற்றுவித்த இயக்கம் ..........
6. வண்ணதாசனுக்கு ......... என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது.
7. எட்டுத்தொகை நூல்கள் ஒன்று ............
8. நான்கு சீர்களைக் கொண்டது ..............

**II. ஓரிரு வரிகளில் விடையளி. (ஐந்தனுக்கு மட்டும்)** 5 x 2 = 10

9. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
10. பகுத்தறிவு என்றால் என்ன?
11. கமுகு மரம் எதைத் தேடியது?
12. குறுந்தொகை - பெயர்க்காரணம் எழுதுக.
13. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் - இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.
14. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. உருவக அணி என்றால் என்ன?

**III. நான்கு வரிகளில் விடையளி. (இரண்டனுக்கு மட்டும்)** 2 x 3 = 6

16. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.
17. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
18. பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**IV. விரிவான விடையளி (ஒன்றினுக்கு மட்டும்)** 1 x 5 = 5

19. தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனி நாயக அடிகளாரின் வழி நிறுவுக.
20. வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

**V. அடிபிறழாமல் எழுதுக.** 4

21 'ஆக்குவது' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

Scanned by TapScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



VI. கீழ்க்காணும் அனைத்திற்கும் விடையளி. 5 x 2 = 10

22. கலைச் சொல் தருக.

1) Humane 2) Philosophy

23. எழுத்துகளை முறைப்படுத்தி சொற்களை கண்டுபிடி.

1) யனிநேம்தம் 2) டுசிப்காட்ஞ்ப

24. சொற்றொடர் உருவாக்குக.

1) பசுமரத்தாணி போல 2) மழைமுகம் காணாப் பயிர்போல்

25. பொருத்தமான வாய்பாடுகளை எழுதுக.

1) மலர்ச்சி – கூவிளம்/புளிமா/கருவிளம்

2) பூங்குட்டி – கருவிளங்கனி /மலர்`/ தேமாங்காய்

26. சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1) மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார் (நேர்க்கூற்றாக மாற்று)

2) கோழிக்குட்டிகளைப் பிடிக்கப் பூனைக் குஞ்சுகள் ஓடின. (பெயர் மரபுப்பிழைகளை திருத்து)

27. அலகிட்டு வாய்பாடு தருக. 2

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்

தீரா இடும்பை தரும்.

ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி. 5

28. வார இதழ் ஒன்றில் படித்த கவிதையை / கதையைப் பாராட்டி அந்த இதழாசிரியருக்கு அஞ்சலட்டையில் கடிதம் எழுதுக. (அல்லது)

நீங்கள் விரும்பிய படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

-------------

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

Scanned by TapScanner